**இந்து சமய அறநிலையத்துறை**

**அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில்,**

**கும்பகோணம் வட்டம்   போன் - 0435 2463385**

# ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிப்பு

இத்திருக்கோயிலில் நடைபெற உள்ள கீழ்காணும் வேலைகளுக்கான ஒப்பந்தபுள்ளி படிவங்கள் இத்திருக்கோயில் அலுவலகத்தில் **08.07.2022 முதல் 21.07.2022** ஆகிய தேதிகளில் அலுவலக நேரத்தில் விற்பனை செய்யப்படும்.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் **22.07.2022** ந்தேதி பகல் 12.30 மணி வரை கும்பகோணம் வட்டம், ஒப்பிலியப்பன்கோயில், அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி பெட்டியில் போடப்பட வேண்டும். அதே தினத்தில் பிற்பகல் **01.00** மணியளவில் இலாக்கா பொறியாளர் மற்றும் ஆஜராகியிருக்கின்ற ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி திறந்து பதிவு செய்யப்படும். ஒப்பந்தபுள்ளி அளிப்பவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கோரப்படுகிறது

## வேலையின் விபரம்

| வ. எண் | வேலை விபரம் | டெண்டர் தொகை ரூ. | டேவணி தொகை ரூ. | டெண்டர் படிவம் விலை ரூ. | முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | மடப்பள்ளி மற்றும் யாகசாலை பழுதுபார்த்து புதுப்பித்தல் பணி | 5,01,020/- | 5,100/- | 1,770/- | 3 மாதங்கள் |
| 2. | திருமதில் சுவர் பழுதுபார்த்து புதுப்பித்தல் பணி | 10,64,360/- | 10,700/- | 7,080/- | 3 மாதங்கள் |

## நிபந்தனைகள்

01. ஒப்பந்தபுள்ளி கொடுப்பவர்கள் வேலைக்கான படிவத்தொகை மற்றும் முன் வைப்புத் தொகையினை உதவி ஆணையர்/செயல் அலுவலர் அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில், ஒப்பிலியப்பன்கோயில் என்ற பெயரில் இந்தியன் வங்கி வரைவோலையாக பெற்று அந்த வரைவோலையை திருநாகேஸ்வரம் இந்தியன் வங்கி கிளையில் மாற்றத்தக்க வகையில் செலுத்தலாம் அல்லது ரொக்கமாகவும் செலுத்திய பின்தான் ஒப்பந்தபுள்ளி படிவம் கொடுக்கப்படும்.

02. முன் அனுபவமுள்ள இந்து சமய அறநிலையத்துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தபதி/சிற்பி ஒப்பந்தகாரராக இருக்க வேண்டும். ஒப்பந்தபுள்ளிகளுடன் ஒப்பந்தகாரர் பதிவு சான்று, புதுப்பித்தல் சான்று, வருமான வரி, விற்பனை வரி சான்று மற்றும் GST பதிவு சான்று ஆகியவைகளை இணைத்துப் போடவேண்டும்.

03. ஒப்பந்தபுள்ளி கொடுப்பவர்கள் உறையின் மீது வேலையின் பெயர் மற்றும் முகவரியினை தெளிவாக குறிப்பிட்டு மூ டி முத்திரையிட்டு கொடுக்க வேண்டும்.

04. ஒப்பந்தபுள்ளி கொடுப்பவர் வேலை விபரத்தை கவனித்தும் தலத்தினை நன்கு நேரில் பார்த்தும் திருக்கோயில் அலுவலகத்தில் மதிப்பீடு மற்றும் வரைபடத்தினை பார்த்தும் ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டு பெற்றுக்கொண்டும் ஒப்பந்தபுள்ளி கொடுப்பதாகவே கருதப்படும்

05. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் வரும் **22.072022 ந்தேதி** பகல் 01.00 மணி அளவில் இத்திருக்கோயில் அலுவலத்தில் ஆஜரில் இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் திறந்து பதிவு செய்து வெளியிடப்படும்.

06. வேலைக்கான ஒப்பந்தபுள்ளி தொகை விபரத்தினை எண்ணாலும் எழுத்தாலும் தனித்தனியே அடித்தல் திருத்தல் இன்றி குறிப்பிட வேண்டும். இவ்வாறு அடித்தல் திருத்தல் இருப்பின் சுருக்கொப்பம் இடப்பட வேண்டும். அதிகமாக அடித்தல் திருத்தல் உள்ள ஒப்பந்தபுள்ளி நிராகரிக்கப்படும்.

07. பொதுவாக குறைந்த தொகையாக உள்ள ஒப்பந்தபுள்ளியே ஏற்றுக்கொள்ளப்படும். திருக்கோயில் நன்மையைக் கருதி எந்த ஒரு ஒப்பந்தபுள்ளியையும் காரணம் கூறாமல் நிராகரிக்க அல்லது அங்கீகரிக்க உதவி ஆணையர்/செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

08. ஒப்பந்தகாரர் தளவாட சாமான்களை தனது பொறுப்பிலேயே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

09. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர் பணி ஆணை வழங்கப்பட்ட ஒரு வாரகாலத்திற்குள் தனது செலவில் ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்து கூடுதல் பாதுகாப்பு வைப்பு தொகையினை செலுத்தியும், குறித்த காலத்தில் வேலையை முடிக்க வேண்டும்.

10. ஒப்பந்தம் கிடைக்காத ஒப்பந்தகாரரின் முன்வைப்புத் தொகை ஒப்பந்தபுள்ளி அங்கீகரிக்கப்பட்டபின் வழங்கப்படும்.

11. செய்யப்பட்ட வேலைக்கு அவ்வப்போது இலாக்கா பொறியியல் துறையினர் அளவீடு செய்து சான்று செய்யப்படும் தொகையினையே வழங்கப்படும். அதன்படி வழங்கப்படும் தொகையில் அரசு வரிகள் மற்றும் காப்பீடு தொகை 5% வருங்கால பிடித்தத்திற்கோ அல்லது அதிகமாக பணம் பெற்றிருந்தால் ஈடு செய்வதற்கோ இறுதிப்பட்டியல் அங்கீகரிக்கப்படும் போது 21/2% காப்பீட்டுத் தொகை பணி முடிந்து ஒரு வருட காலம் கடந்தபின்பு ஒப்பந்தகாரர் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். பணியில் குறைபாடுகள் இருக்கும் பட்சத்தில் அதனை சரி செய்த பின்னரோ அல்லது துறை மூலம் சரி செய்து தொகை மீதம் இருந்தால் வழங்கப்படும்.

12. டேவணித்தொகை 1% மற்றும் கூடுதல் பாதுகாப்புத் தொகை 1% பணி முடித்து ஒரு வருட காலம் முடிந்தபின்பும், இறுதிப்பட்டியலில் நிலுவை செய்யப்படும். 2 1/2% காப்பீட்டுத் தொகை பணி முடிந்து ஒரு வருட காலம் கடந்த பின்பு ஒப்பந்தகாரர் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். பணியில் குறைபாடுகள் இருக்கும் பட்சத்தில் அதனை சரி செய்த பின்னரோ அல்லது துறை மூலம் சரி செய்து தொகை மீதம் இருந்தால் வழங்கப்படும்.

13. ஒப்பந்தம் ஒப்புதல் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.

14. திருப்பணி வேலைகள் இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதிகளுக்குட்பட்டும், ஆகம விதிகளுக்கு உட்பட்டும் செய்ய வேண்டும்.

15. பணிகள் அனைத்தும் துறை பொறியாளர்களின் மேற்பார்வையில் செய்ய வேண்டும்.

16. வேலையின்போது தொழிலாளிகளுக்கோ அல்லது பொருட்களுக்கோ நட்டம் ஏற்பட்டால் அதற்கு ஒப்பந்தகாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

17. இரண்டு முறைக்குமேல் இச்சரக திருக்கோயில்களில் ஒப்பந்தபுள்ளி பெற்றும் ஒப்பந்தம் போடாமல் உள்ள ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்பந்தபுள்ளி படிவம் வழங்கப்படாது.

18. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் இதர விபரங்களை அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

தா. உமாதேவி, எம்.எல்,
தக்கார்/துணை ஆணையர்
சுவாமிமலை

க.ராமு,பி.ஏ.பி.எல்.,
துணை ஆணையர்/சரிபார்ப்பு அலுவலர்,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)